**விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியம் 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1994 மார்ச் 09 ஆந் திகதிய விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு உறுதி மற்றும் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்தின் உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் சம்பந்தமாக பார்க்கையின் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இயலுமான வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 49 ஆம் பிரிவிற்கு முரணாக ஆதனம், பொறி மற்றும் உபகரண விடயங்களை மீள்மதிப்புச் செய்யும் போது அச்சொத்துக்கள் சார்ந்த ஆதனம், பொறி மற்றும் உபகரண வகுதிகள் முழுமையாக மீள்மதிப்புச் செய்யப்பட்டிருக்காததுடன் அந்த நியமத்தின் 42 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 513,575 தொகையான முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து இன்னும் பயன்பாட்டிற்கு எடுத்துக் காணப்படுகின்ற சொத்துக்கள் மீள்மதிப்புச் செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீள்மதிப்புக் குழு அறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் உடைந்த பொருட்களாக நீக்கியுள்ளதனால் மீள்மதிப்பு பெறுமதி 0 ஆக காட்டப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த மர அலுமாரி மீளமதிப்புச் செய்யப்படவில்லை. | நியமத்தின் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்ற சொத்துக்கள் மீள்மதிப்புச் செய்து கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்த எனினும் பயன்பாட்டிற்கு எடுத்துக் காணப்படுகின்ற 2023 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாதத்தின் போது மீள்மதிப்புச் செய்து கணக்கீடு செய்யப்பட்டிருந்த சொத்துக்களுக்காக மீள்மதிப்புச் செய்த திகதியிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் | அனைத்து மீள்மதிப்பு செய்த சொத்துக்களும் 2023 ஆம் ஆண்டிற்காக பெறுமானத் தேய்வு செய்யப்படவில்லை. | மீள்மதிப்புச் செய்த சொத்துக்களின் பெறுமானத் தேய்வு செலவுகள் இனங்காணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய பெறுமானத் தேய்வு செலவினை அடையாளங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | | |
| (ஆ) | ரூபா 7,241,656 ஆக நிர்மாண வேலைக் கணக்கின் மீதி காட்டப்பட்டிருந்தும் உள்ளபடியாக அக்கணக்கில் அவ்வாறான மீதி காணப்பட்டிருக்காததனால் இப்பெறுமதியால் நடைமுறைச் சொத்துக்கள் அதிக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களாக காட்டப்பட்டுள்ள ரூபா 7,241,656 தொகையான சேமிப்புக் கணக்கின் மீதி நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட மீதியானதுடன் இது சம்பந்தமாக ஒரு குழுவினை நியமித்து கணக்கேடுகளிலிருந்து நீக்குவது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உள்ளபடியாக காணப்படுகின்ற மீதியை மாத்திரம் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | ரூபா 1,193,727 தொகையான அடையாளங்காண முடியாத பெறவேண்டிய வட்டி மீதி, ரூபா 14,347,914 தொகையான பெறவேண்டிய குறுங்கால கடன் மீதி மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தோற்றுவிக்கும் போது பொறுப்பேற்கப்பட்டிருந்த ரூபா 9,112,579 தொகையான விவசாயிகள் குழு கடன் மீதியை அறவீடு செய்யும் இயலுமை நிச்சயமற்றதாக இருந்ததுடன் அதற்காக ஐயக்கடனுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ரூபா 1,193,727 தொகையான ஏனைய பெறவேண்டிய கடன் வட்டி மீதியை எதிர் காலத்தில் கணக்கேடுகளிலிருந்து நீக்குவதற்கும் ரூபா 14,347,914 தொகையான பெறவேண்டிய குறுங்கால கடன் மீதியில் ரூபா 9,347,676 மீதி சம்பந்தமாக ஒரு குழுவினை நியமித்து மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கும் ரூபா 700,218 கடன் மீதி சம்பந்தமாக நி.பி 104 இன் பிரகாரம் பரீட்சிப்புக்களை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 4,300,000 கடன் மீதி சம்பந்தமாக சட்ட மா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ரூபா 9,112,579 விவசாய குழுக்கடன் மீதி சம்பந்தமாக ஒரு குழுவினை நியமித்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிச்சமற்ற மீதிகளுக்காக ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2002 ஆம் ஆண்டின் போது சுழற்சி நிதியத்தினையும் கமத்தொழில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினையும் ஒன்றிணைத்து விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினை தோற்றுவிக்கும் போது ஒப்படைக்கப்பட்ட ரூபா 697,644 பெறுமதியான விவசாயிகளின் வைப்புக்கள், ரூபா 591,965 பெறுமதியான பங்கு கணக்குகள் மற்றும் ரூபா 159,399,408 தொகையான கொவிசெத நிதியத்தில் குறிப்பிட்ட மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக எந்த சான்றுகளும் சமர்ப்பிக்கப்படாததனால் அந்த மீதிகளின் சரியானதன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. | 2002 ஆம் ஆண்டின் போது சுழற்சி நிதியத்தினையும் கமத்தொழில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினையும் ஒன்றிணைக்கும் போது விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாவில் காட்டப்பட்டுள்ள ரூபா 160,689,017 தொகையான மீதிக்காக 2022 ஏப்ரல் 01 ஆந் திகதியில் உள்ளவாறான மீதிப் பட்டியல் மாத்திரம் விசசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடம் காணப்படுவதுடன் அந்த மீதிப்பட்டியல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பித்தலுக்கு இணங்க அவற்றின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு கடன் வழங்குவதற்காக உருவாக்கிக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கடன் பணம் வழங்கிய திகதியிலிருந்து கடனை மீளச் செலுத்துதல் ஆரம்பிக்கப்படுகின்ற திகதி அதாவது 2023 யூலை 31 ஆந் திகதியிலிருந்து செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையான காலத்திற்கான வட்டி ரூபா 3,814,633 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் கடன் பணமும் வட்டியும் செலுத்துதல் ஆரம்பமாவது ஒக்தோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து சனவரி 31 ஆந் திகதி என்பதனால் அக்காலப்பகுதி தொடர்பாக மாத்திரம் வட்டி கணிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் உடன்படிக்கையின் பிரகாரம் உரிய காலப்பகுதியின் போது முழுக் கடன் பணமும் வட்டிப் பணமும் முழுமையாக அறவிடப்பட்டுள்ளன. | உடன்படிக்கையின் பிரகாரம் வட்டி வருமானம் கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலிவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1994 மார்ச் 09 ஆந் திகதிய விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 14 ஆம் பிரிவு | நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக ஆளணியினரை சேர்த்துக்கொள்ளும் நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டத்தின் போதும் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டதுடன் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | ஆட்சேர்பபு நடைமுறை தயாரிக்கப்படு தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் I ஆம் பகுதியின் 15.1 ஆம் பந்தி (நி.பி 876(2)) | தற்பொழுது அமுல்பபடுத்தப்படுகின்ற நியதிச்சட்டமற்ற நிதியங்களை உடனடியாக அமுலுக்குவரும் வகையில் இரத்துச் செய்து அவற்றின் காசு மீதிகளை திரண்ட நிதியத்திற்கு செலவுவைக்க வேண்டியதுடன் அவ்வாறு இல்லையாயின் தொடர்ந்தும் செயற்படுத்துவதற்கான நியாயமான காரணம் உள்ளதாயின் அவ்வாறான நிதியத்தினை பாராளுமன்ற அதிகாரச் சட்டத்தின் மூலம் சட்டமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும் 1994 மார்ச் 09 ஆந் திகதி விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்த நிதியம் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் நம்பிக்கைப் பெறுப்பு உறுதியின் மூலம் அமுல்ப்படுத்துப்படுவதுடன் உரிய அதிகாரச் சட்டத்தின் வரைபு சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் பாராளுமன்ற அதிகாரச் சட்டத்தின் மூலம் சட்டமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி | விவசாயிகள், நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவது தொடர்பாக மீளாய்வாண்டிற்கான | விவாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் காணப்படுகின்ற மிகைப் பணம் மிகவும் விளைதிறனான வகையில் நிலையான | செயல்நடவடிக் கைத் திட்டத்தினை தயாரித்து அதற்கிணங்க |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கைக்குரிய படிவங்கள் மற்றும் வழிகாட்டிகள் 05 பின்னிணைப்பு I அத்தியாயம் 07 | செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக தேவைப்படும் வகையில் அப்பணம் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 611,553,842 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 48,833,512 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 562,720,330 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது பொதுத்திறைசேரியிடமிருந்து கொவிசெத லொத்தர் வருமான பெறுவனவு மற்றும் வட்டி வருமானம் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2002 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு வரை 09 சந்தர்ப்பங்களின் போது தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்கு மொத்தமாக ரூபா 102,662,700 கடன் வழங்கப்பட்டு அவற்றில் ரூபா 9,000,000 ஒரு ஆண்டின் போது மீண்டும் நிதியத்திற்குத் தீர்த்துவைப்பதற்கும் ரூபா 93,662,700 கண்டியில் அமைந்துள்ள மஹபேரியதென்ன தோட்டம் எனும் பெயருள்ள காணியை விற்ற உடன் தீர்த்துவைப்பதற்கும் உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கி கொள்ளப்பட்டது. எனினும் இணங்கிக்கொண்ட சந்தர்ப்பத்தின் போது வெளித்தரப்பினருக்கு காணி 99 ஆண்டுகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் வழங்கி 21 ஆண்டுகள் கடந்திருந்தும் தீர்த்து வைக்கப்படாத கடன் மீதி ரூபா 49,512,700 மற்றும் அதற்கான அட்டுறு வட்டி ரூபா 98,023,448 நிலுவையாகக் காணப்பட்டது. | தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட்டுள்ள இக்கடன் தொடர்பாக தற்பொழுது மாதாந்த தவணைப் பணம் ரூபா 500,000 வீதம் அறவிடப்படுகின்றது. 2023 சனவரி 17 ஆந் திகதி நடைபெற்ற விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் இன்னும் அறவிட வேண்டிய கடன் பணத்தை முழுமையாகச் செலுத்தி முடிவுறுத்துமாறு தெரியப்படுத்தப்பட்டதுடன் அவ்வாறு ஒரு தடவையில் கடன் மீதியை செலுத்தி முடிவுறுத்துவதற்கு நிறுவனத்திற்கு நிதி இயலுமை இல்லை என தெரிவிக்கப்பட்டது. | தீர்த்துவைக்கப்படாத கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் போது கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு சோளப் பயிர்ச்செய்கை மேற்கொள்கின்ற விவசாயிகளுக்கு ரூபா 200,000,000 கடன் வழங்கி அதற்காக ரூபா 1,788,650 கிடைக்க வேண்டிய வட்டி அறவிடப்பட வேண்டிய போதிலும் எந்த வட்டியும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய கடன் வட்டியை அறவீடு செய்வதற்கு குறித்துக் கொள்கிறேன். | வட்டிக்காக பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2016 ஆம் ஆண்டின் போது 24 மாதங்களுக்குள் அறவீடு செய்வதற்கு இணங்கி கொண்டு ரூபா 500,000 பணம் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கைக்காக ஒரு விவசாயிக்கு வழங்கப்பட்டிருந்தும் செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் 07 ஆண்டுகள் கடந்திருந்தும் கடன் பணமும் வட்டியும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இக்கடன் மீதி சம்பந்தமாக கமத்தொழில் நீதிமன்றத்தினால் மேலதிக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கடன் பணத்தையும் வட்டிப் பணத்தையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ரண் கெவிலிய சமூக தொழில்முயற்சி பொதுக் கம்பனிக்கு ஒரு ஆண்டு காலத்தில் கொடுப்பனவு செய்யும் அடிப்படையில் ரூபா 5,966,000 வட்டி இல்லாத கடன் 2018 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தும் உரிய பணம் மீளாய்வாண்டு வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | கடன் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | விவசாயிகள் கம்பனிக்கு கடன் வழங்குவதற்காக கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் அடிக்கடி வழங்கப்பட்ட கடன் பணத்திலிருந்து அறவீடு செய்யவுள்ள மீதி ரூபா 14,347,914 ஆக இருந்ததுடன் 24 ஆண்டுகளிலிருந்து 32 ஆண்டுகள் வரையான கால வீச்சு கடந்திருந்தது. | அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன் பணத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை துரிதமாக எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டின் போது சுழற்சி நிதியத்தினையும் கமத்தொழில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினையும் ஒன்றிணைத்து விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினை தோற்றுவிக்கும் போது நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட சுழற்சி நிதியத்தின் ரூபா 44,255,850 தொகையான குறுங்கால கடன் மீதியை அறவீடு செய்வதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,490,000 படிகள் செலுத்தி ஓய்வுபெற்ற 10 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் இன்னும் அறவிடப்படாத கடன் மீதி ரூபா 39,909,275 ஆகும். | 2014 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட புலனாய்விற்கு இணங்க இன்றுவரை சுழற்சி நிதியத்தின் கடன் மீதியில் ரூபா 4.3 மில்லியனுக்கு மேற்பட்ட பணம் அறவிட்பட்டுள்ளதுடன் மிகுதிக் கடன் மீதி சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டு மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஒரு தனியார் கம்பனிக்கு 2003 ஆம் ஆண்டின் போது வழங்கியுள்ள கடன் பணத்தில் ரூபா 860,000 தொகை மற்றும் அட்டுறு வட்டிப் பெறுமதி ரூபா | பிரயிம் ஹேர்ப் லங்கா தனியார் கம்பனியிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் | கடன் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 816,666 இன்னும் அறவிட வேண்டி இருந்தது. | திணைக்களத்திற்கு தற்பொழுது அனுப்பவைக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | பெரிய வெங்காய விதையினை உற்பத்தி செய்கின்ற 63 விவசாயிகளுக்கு 2016 ஆம் ஆண்டளவில் வழங்கிய கடன் பணத்தில் ரூபா 2,451,780 தொகையான கடன் மீதி அறவிடப்படாது காணப்பட்டது. | இக்கடன் மீதி பகுதிபகுதியாக அறவிடப்படுகின்றது. உரிய விவசாயிகளிடமிருந்து பணத்தை அறவிட்டு கமநல சேவை குழுக்களினூடாக தலைமை அலுவலகத்திற்கு கிடைத்து விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அப்பணம் கிடைக்கும் போது தாமதம் ஏற்படுகின்றது. இந்த மீதியை துரிதமாக தீர்த்து முடிவுறுத்துமாறு கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. இக்கடன் தொடர்பாக 2024 ஏப்ரல் 30 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 11,851,087 ஆகும். | இணங்கிக்கொண்டவாறு கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | ஒரு ஆண்டிற்குள் அறவீடு செய்யும் நிபந்தனையின் கீழ் அனுராதபுரம் மாவட்டத்தில் சோளப்பயிர்ச் செய்கை மேற்கொள்கின்ற விவசாயிகளுக்கு வழங்குவதற்கு கமத்தொழில் ஆணையாளர் நாயகத்திற்கு 2015 ஆம் ஆண்டின் போது வழங்கிய கடனில் 13,223,746 மீதி அறவிட வேண்டிக் காணப்பட்டது. | இக்கடன் மீதியும் பகுதிபகுதியாக அறவிடப்படுகின்றது. உரிய விவசாயிகளிடமிருந்து பணத்தை அறவிட்டு கமநல சேவை குழுக்களினூடாக தலைமை அலுவலகத்திற்கு கிடைத்து விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அப்பணம் கிடைக்கும் போது தாமதம் ஏற்படுகின்றது. | இணங்கி கொண்டவாறு கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2022/23 பெரும் போகத்தில் தேசிய விதை நெல் தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்காக அவசர விதைநெல் கொள்வனவு செய்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 50 மில்லியன் கடன் முற்பணம் 2022 யூலை 21 ஆந் திகதி கமத்தொழில் திணைக்களத்திற்கு வழங்கி ஒரு மாதம் முழுவதும் அத்திணைக்களத்தில் விளைவற்று இருந்த அப்பணம் மீண்டும் 2022 ஆகஸ்ட் 20 ஆந் திகதி கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அப்பணத்தில் ரூபா 36,656,960 தொகை பயன்படத்தப்படாதிருந்ததுடன் அது வழங்கிய முழுப் பணத்தில் 73.31 சதவீதமாகும். | 21 மாவட்டங்களுக்கு விதை நெல்லை கொள்வனவு செய்வதற்குத் தேவைப்படும் வகையில் பணத்தை வேண்டுமாறு உரிய மாவட்டங்களுக்கு கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரியப்படுத்தப்பட்டது. விதை நெல்லை கொள்வனவு செய்வதற்காக ரூபா 50 மில்லியன் பணம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் பணம் கிடைக்கும் சந்தர்ப்பம் அளவில் தனியார் துறையில் விதை நெல்லை கொள்வனவு செய்வதற்காக அதிக விலை காணப்பட்டதனால் கமநல சேவை நிலையங்களுக்கு வழங்கிய பணம் மட்டுப்பாட்டின் கீழ் அந்த நடவடிக்கையை மேற்கொள்ளுதல் சிக்கலானதாக இருந்ததனால் ஹம்பாந்தோட்டை, மன்னார், பதுளை, கேகாலை ஆகிய 04 மாவட்டங்களினால் மாத்திரம் ரூபா 24,600,000 பணம் வேண்டிக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அப்பணம் வழங்கப்பட்டது. 02 மாவட்டங்களுக்கு வழங்கிய ரூபா 11,256,960 முழுப் பணமும் அப்பண எல்லைக்கு உட்பட்டு விதை நெல்லை கொள்வனவு செய்வதற்கு முடியாதிருந்ததன் காரணமாக மீண்டும் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு மீளளிப்புச் செய்யப்பட்டது. | பெற்றுக்கொண்ட கடன் உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படுகின்றது என்பது உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். |